# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 365/ந/2025, நாள் 11.03.2026

K. உதயகுமார்,
ஆற்காடு, இராணிப்பேட்டை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
ஆற்காடு நகராட்சி, இராணிப்பேட்டை மாவட்டம் – எதிர்மனுதாரர்

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு, பூபதி நகர், எண்.131/90 என்ற முகவரியில் வசிக்கும் திரு.K.உதயகுமார் என்பவரது 14.07.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.07.2025 அன்று பெறப்பட்டு, 365/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு, பூபதி நகர், எண்.131/90 என்ற முகவரியில் வசிக்கும் திரு.K.உதயகுமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள முறையீட்டு மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"நான் ஆற்காடு நகராட்சியில் 28–வது வார்டு உறுப்பினராக உள்ளேன். ஆற்காடு நகராட்சியில் கடந்த ஜுன்–20, 2025 அன்று நடைபெற்ற நகர மன்ற கூட்டத்தில் வைக்கப்பட்ட கீழ் காணும் மன்றப்பொருள்கள்.

மன்றப்பொருள்: 04

நகராட்சியில் இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர் & அமினிடீஸ் ஃபண்ட் – 2022–2023ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் வார்டு எண் 04 ரூ.600.00 இலட்சம் மதிப்பீட்டில் பழைய பேருந்து நிலைய வளாகத்தில் புதியதாக பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கு 28.03.2023 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்பட்டதின்படி பெறப்பட்ட 2 ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

2 ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்பந்ததாரரின் KSN CONSTRUCTION ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.05% குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்கண்ட பணிக்கு LOA கடிதம் மற்றும் வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும், மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

மன்றப்பொருள்: 06

ஆற்காடு நகராட்சியில் அம்ரூத் 2.0 – 2023–2024ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் வார்டு எண் 9 மற்றும் 30, நவாப் ஏரி புணரமைக்கும் பணிக்கு ரூ.57.00 இலட்சம் மதிப்பீட்டில் இப்பணிக்கு 06.02.2024 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகளில் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

2 ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.M.V.மதி ஒப்பந்ததாரரின் ஒப்பந்த புள்ளி மதிப்பீட்டை விட 0.00001% குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்கண்ட பணிக்கு LOA கடிதம் மற்றும் வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும், மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

மன்றப்பொருள்: 09

ஆற்காடு நகராட்சியில் CAPITAL GRANT FUND 2022-2023 கீழ் ரூ.540.00 இலட்சம் மதிப்பீட்டில் SUPPLYING AND LAYING OF 400 MM.DI K9 pipe 2.50 KMS FROM VEPPUR HEAD WORKS TO ANNA NAGAR OHT AND TNHB PHASE-1 OHT AND SUPPLYING AND LAYING OF 200 MM DI K9 2.75 KMS TAPPING FROM KALAVAI ROAD TO BOOPATHY NAGAR OHT, TOTAL LENGTH OF 5.25 KMS AND REPLACE பணிக்கு 08.05.2023 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகளில் கீழ்க்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

2 ஒப்பந்தப்புள்ளிகளில் KEYAM INFRA PROJECT PVT LTD. ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளி மதிப்பீட்டை விட 0.11% குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்கண்ட பணிக்கு LOA கடிதம் மற்றும் வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும், மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

மன்றப்பொருள்: 10

ஆற்காடு நகராட்சியில் தினசரி சந்தை அமைக்கும் பணிக்கு சென்னை ஆரணி சாலையில் வார்டு எண். A S F No.114–145 block No.28–ல் புதிய தினசரி மார்க்கெட் அமைக்கும் பணிக்கு ரூ.348.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சி குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.4 D எண்.23ல் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக செயற்பொறியாளர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.001/2022/0001 நாள் 07.12.2022 தேதியில் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. 23.12.2022 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகளில் கீழ்கண்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

2 ஒப்பந்தப்புள்ளிகளில் K.இராஜாராம் & கோ ஒப்பந்ததாரரின் ஒப்பந்த புள்ளி மதிப்பீட்டை விட 0.03% குறைவாக உள்ளதை எற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்கண்ட பணிக்கு LOA கடிதம் மற்றும் வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும், மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

மன்றப்பொருள்: 12

நகராட்சி நிர்வாக இயக்குனர், சென்னை அவர்களின் செயல் முறைகள் ந.க.எண்.9192/2023/sbm 1 நாள் 21.08.2023ல் தூய்மை இந்தியா திட்டம் கீழ் நகராட்சிக்கு கழிவு நீர் தொட்டி வாகனம் 2 எண்கள் கொள்முதல் செய்தல் பணியினை மதிப்பீடு தொகை ரூ.86.5 இலட்சத்தில் வாங்கிக்கொள்ள அனுமதி வாங்கி 06.10.2023 தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் விலைப்பட்டியல் 26.10.2023 தேதி திறக்கப்பட்டது.

தூய்மை இந்தியா திட்டம் கீழ் நகராட்சிக்கு கழிவுநீர் தொட்டி வாகனம் 2 எண்கள் சப்ளை செய்யும் பணி 86.5 லட்சம்.

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.01% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள SAKTHI BODY WORKS என்ற நிறுவனத்தில் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.

மன்றப்பொருள்: 13

ஆற்காடு நகராட்சியில் CAPITAL GRANT FUND 2022-2023 ரூ.244.00 இலட்சம் மதிப்பீட்டில் REJUVENTION OF PIPE CARRYING BRIDGE OF 240 M LENGTH AND CONSTRUCTION OF COLLECTION WELL CUM PUMP ROOM OF 7MM DIAMETER WITH ALL ELECTROMECHANICAL TERMS @ VEPPUR HEAD WORKS பணிக்கு 08.05.2023 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதின் பெறப்பட்ட 2 ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டது.

2 ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.K.இராஜாராம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்த புள்ளி மதிப்பீட்டை விட 0.01% குறைவாக உள்ளதை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

பணியின் அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மேற்கண்ட பணிக்கு LOA கடிதம் மற்றும் வேலை உத்தரவு வழங்கப்பட்டதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

மேற்கண்ட இந்த மன்றப்பொருள்களை ஏன் இவ்வளவு காலதாமதமாக நகர மன்ற பொருளாக வைக்கிறார்கள்? இந்த காலதாமதத்திற்கு காரணம் யார்? மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு பில் பட்டியல் வழங்கி இருக்கும் பட்சத்தில் நகர மன்ற பொருளில் வைக்காமல் எப்படி பில் பட்டியல் வழங்கினார்கள். மேற்கண்ட ஒப்பந்தம் நடைப்பெற்றதில் விதிமீறல்கள் மற்றும் முறைகேடுகள் நடந்திருப்பின் இக்காலதாமதத்திற்கு யார் காரணமாக இருந்தாலும், அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆற்காடு நகராட்சியில் நடைபெறும் அனைத்து பணிகளுக்கும், நகர மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி செய்வதாக கூறப்படுகிறது. குறிப்பாக 70%க்கும் மேலான பணிகள் முன் அனுமதி பெற்று நடைப்பெற்றுள்ளது. இது மன்றப்பார்வைக்கு வராத காரணத்தினால் முறைகேடு நடந்திருக்க வாய்ப்புள்ளது. எனவே நகர மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று நடைபெற்ற அனைத்து பணிகளையும், மறுபரிசீலனை செய்து அதில் தவறு நடந்திருப்பின் சம்மந்தப்பட்ட துறைசார்ந்த அதிகாரிகளின் மீதும் மற்றும் முன் அனுமதி வழங்கிய நகர மன்ற தலைவர் அவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரி கேட்டுக்கொள்கிறேன்".

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 10.11.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஆற்காடு நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3) ஆற்காடு நகராட்சி ஆணையர் தனது அறிக்கையினை 25.02.2026 நாளிட்ட கடிதம் ந.க.எண்.000298/2026/இ1–ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார். அதில்:-

"ஆற்காடு நகராட்சியின் 28–வது வார்டு உறுப்பினர் திரு.K.உதயகுமார் என்பவர் 14.07.2025 அன்று ஆற்காடு நகராட்சியில் நடைப்பெற்று வரும் திட்ட பணிகள் குறித்து தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். அதில் ஆற்காடு நகராட்சியில் நடைப்பெற்று வரும் 70% சதவீதத்திற்கு மேலான பணிகள் முன்கூட்டியே மன்றத்தின் அனுமதி பெறாமல் நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடைபெற்று வருவதாகவும் இதனால் முறைகேடுகள் மற்றும் பணிகளில் காலதாமதம் நிகழ்ந்திருக்கக்கூடும் என்று முறையிட்டுள்ளார்.

ஆற்காடு நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் யாவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை பொறியாளர், சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு உரிய நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பின்னர் முறையான நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட பின்னரே பணிகள் தொடங்கப்படுகிறது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள பணிகளில் காலதாமதம் மற்றும் சுணக்கம் ஏற்படாத வண்ணம் இருக்க வேண்டிய அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 20.06.2025ல் மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 14.07.2025ம் தேதி அன்று புகார் கடிதம் வழங்கியுள்ளார். ஆனால் மனுதாரர் தெரிவித்துள்ள அனைத்து பணிகளுக்கு நகரமன்றத்தில் 20.06.2025ம் தேதி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசாணை எண்.158, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 02.11.2022–ல் திட்டப்பணிகளை நகரமன்றத்திற்கு பொருள் வைக்காமல் நேரடியாக பணிகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது. இருப்பினும் அனைத்து நகரமன்ற உறுப்பினர்களின் தகவலுக்கு மட்டுமே மன்றத்திற்கு பொருள் தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் அரசிடம் மானியம் பெற்று செய்து முடிக்கும் பணிகள் அனைத்தும் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் முடிக்க வேண்டிய நிலையில் பிரதி மாதம் ஒருமுறை மட்டுமே நகரமன்றத்தால் சாதாரண கூட்டம் நடைபெறுவதால் பணிகள் தன்மைக்கு ஏற்ப நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று திட்டப்பணிகள் செய்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதில் எந்தவித விதிமீறல்கள் மற்றும் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்".

4) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையர் ஆகியோரை 27.02.2026 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.02.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் திரு.K. உதயகுமார் அவருக்கு உதவியாக திரு.S.சுரேஷ் என்பவரும் 27.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை அளித்துள்ளனர். அதில்:–

"1) 2022–23–ல் ஆற்காடு நகராட்சியில் பழைய வளாகத்தில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு KSN Construction –க்கு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.05 குறைவாக உள்ளதை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. புதிய

பேருந்து நிலையத்தில் மொத்தம் உள்ள கடைகளில் 53 கடைகளுக்கு மட்டுமே DTCP approval நகராட்சியால் பெறப்பட்டுள்ளது.

2) அம்ரூத் 2–0 – 2023–24 ஆம் திட்டத்தின் கீழ் வார்டு எண்.9 மற்றும் 30, நவாப் ஏரி புனரமைக்கும் பணிக்கு ரூ.57.00 லட்சம் மதிப்பீட்டில் பணி வழங்கவும் அப்பணிக்கு 06.02.2024 தேதியில் 0.00001% குறைவாக உள்ளதை ஏற்று பெறப்பட்ட ஒப்பீடு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக RTI மூலம் சம்மந்தப்பட்ட அளவு புத்தகம் வழங்கும்படி நகராட்சியை கேட்டுள்ளோம். இதுவரை எங்களுக்கு வழங்கப்படவில்லை.

3) CAPITAL GRANT FUND 2022-2023-ன் கீழ் ரூ.540.00 லட்சம் மதிப்பீட்டில் 5.25 கி.மீ. அளவில் KEY INFR PROJECT PVT.LTD. ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.11% குறைவாக உள்ளதை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

4) சென்னை ஆரணி சாலையில் வார்டு எண்.A.S.F.No.114-145 block No.28–ல் புதிய தினசரி மார்கெட் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ரூ.348.00 லட்சம் மதிப்பீட்டில், K. இராஜாராம் & கோ ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.03% குறைவாக உள்ளதை ஏற்று பணி உத்தரவு வழங்க நகர் மன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

5) தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கழிவுநீர் தொட்டி வாகனம் 2 எண்கள் கொள்முதல் செய்தல் பணியினை மதிப்பீடு தொகை ரூ.86.5 லட்சத்தில் வாங்கி கொள்ள அனுமதி பெற்று வரப்பெற்ற 2 ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீ.டை விட 0.01% குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள SAKTHI BODY WORKS என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என நகர்மன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

6) CAPITAL GRANT FUND 2022–2023 ரூ.244.00 லட்சம் மதிப்பீட்டில் REJUVENTION OF PIPE CARRYING BRIDGE OF 240 M LENGTH and construction of collection well cum pump room of 7mm. diameter with all electromechanical terms 7mm. dia meter works திரு.K.இராஜாராம் என்ற ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.01% குறைவாக ஏற்று பணி உத்தரவு வழங்க நகர் மன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மன்றப்பொருள்கள் காலதாமதமாக வைக்கப்பட்டதற்கான காரணங்கள் மற்றும் காலதாமதத்திற்கு காரணமானவர்கள் யார் என்பதையும், மேற்கண்ட பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களுக்கு பில் பட்டியல் தொகை வழங்கி இருக்கும்பட்சத்தில் நகரமன்ற பொருள் கூட்டத்தில் வைக்காமல் எவ்வாறு பில் பட்டியல் தொகை வழங்கினார்கள் என்பதையும், முறைகேடுகள் நடந்திருப்பின் உரிய நடவடிக்கை காரணமானவர்கள் மீது எடுக்க கேட்டுக்கொள்கிறோம்.

மன்றப்பார்வைக்கு வராமல் ஆற்காடு நகராட்சியில் நடைபெறும் பல்வேறு பணிகள் நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடைபெற்றுள்ளதால் முறைகேடுகள் நடந்திருக்க வாய்ப்புள்ளது எனவும் தெரிவித்துக்கொள்கிறோம். ஆகவே மேற்கண்ட பணிகளை மறுபரிசீலனை செய்து தவறு நடந்திருப்பின் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகள் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்". என தெரிவித்துள்ளனர்.

6) எதிர்மனுதாரரான ஆற்காடு நகராட்சி ஆணையர் 27.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:–

“ஆற்காடு நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் யாவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைப்பொறியாளர், சென்னை அவர்களுக்கு திட்ட பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு உரிய நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு பின்னர் முறையான நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற்ற பின்னரே பணிகள் தொடங்கப்படுகிறது.

அரசாணை எண்.158, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 02.11.2022ன்படி திட்டப்பணிகளை நகரமன்றத்திற்கு பொருள் பார்வைக்கு மட்டுமே வைக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளன. மனுதாரர் பணிகளில் காலதாமதம் மற்றும் சுணக்கம் ஏற்படாதவண்ணம் இருக்க வேண்டிய அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள ஆற்காடு நகராட்சியில் நடைபெறும் பணிகளுக்கு அனைத்து தீர்மானங்களும் 3 தினங்களுக்கு முன்னரே நகர்மன்ற உறுப்பினர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இதில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருப்பின் நகர்மன்றக்கூட்டத்தில் தெரிவிக்கப்படவேண்டும்.

மனுதாரருக்கு மேற்கண்ட புகார்கள் தொடர்பாக 01.07.2025 அன்று விசாரணைக்கு ஆஜராக நோட்டீஸ் அனுப்பப்பட்டது. அதனை தொடர்ந்து 14.07.2025 அன்று நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டது. ஆனால் மனுதாரர் அதற்கு நேரடியாக ஆஜராகததோடு பதில் ஏதும் சமர்பிக்கவில்லை.

அரசிடம் மானியம் பெற்று செய்து முடிக்கும் பணிகள் அனைத்தும் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் முடிக்க வேண்டிய நிலையில் பிரதி மாதம் ஒருமுறை மட்டுமே நகரமன்றத்தால் சாதாரண கூட்டம் நடைபெறுவதால் பணிகள் தன்மைக்கு ஏற்ப நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று திட்டப்பணிகள் செய்து முடிக்க நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதனை தொடர்ந்து சாதாரண கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்படுகிறது.

புதிய பேருந்து நிலையத்தில் 112 கடைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. நவாப் ஏரி புனரமைக்கும் பணியில் Fencing அமைக்கும் பணி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது. சென்னை ஆரணி சாலையில் புதிய தினசரி மார்க்கெட் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது.

CGF திட்டத்தின் கீழ் Pipe Carrying Bridge பணி முடிக்கப்பட்டுள்ளது. SPM 2.0 திட்டத்தின் கீழ் cesspool 2 எண்ணிக்கை கழிவுநீர் அகற்றும் வாகனம் கொள்முதல் செய்யப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

மனுதாரரின் புகாரில் தெரிவித்துள்ள எந்தப்பணியிலும் விதிமீறல்கள் மற்றும் முறைகேடுகள் எதுவும் நடைபெறவில்லை என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் முன்பு பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்”.

7) மனுதாரரின் புகார் மனு, மனுதாரர் மற்றும் அவருக்கு உதவியாக ஆஜரான திரு.S.சுரேஷ் ஆகியோர் இணைந்து அளித்துள்ள வாக்குமூலம், ஆற்காடு நகராட்சி ஆணையரின்அறிக்கை, வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

ஆற்காடு நகராட்சியில் (1) வார்டு எண் 04–ல் இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர் & அமினிடீஸ் ஃபண்ட் 2022–2023ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் ரூ.600.00 இலட்சம் மதிப்பீட்டில் பழைய பேருந்து நிலைய வளாகத்தில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணி (2) வார்டு எண் 9 மற்றும் 30ல் அம்ரூத் 2.0 – 2023–2024ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் ரூ.57.00 இலட்சம் மதிப்பீட்டில் நவாப் ஏரி புனரமைக்கும் பணி (3) CAPITAL GRANT FUND 2022–2023–ன் கீழ் ரூ.540.00 இலட்சம் மதிப்பீட்டில் SUPPLYING AND LAYING OF 400 MM DI K9 PIPE 2.50 KMS FROM VEPPUR HEAD WORKS TO ANNA NAGAR OHT AND TNHB

PHASE-1 OHT AND SUPPLYING AND LAYING OF 200 MM DI K9 2.75 KMS TAPPING FROM KALAVAI ROAD TO BOOPATHY NAGAR OHT, TOTAL LENGTH OF 5.25 KMS AND REPLACE பணி (4) சென்னை ஆரணி சாலையில் வார்டு எண்.A, S.F.No.114-145 block No.28–ல் ரூ.348.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய தினசரி மார்க்கெட் அமைக்கும் பணி (5) தூய்மை இந்தியா திட்டம் கீழ் ரூ.86.5 இலட்சத்தில் இரு கழிவு நீர் தொட்டி வாகனம் கொள்முதல் செய்யப்பட்டது. (6) CAPITAL GRANT FUND 2022-2023 ரூ.244.00 இலட்சம் மதிப்பீட்டில் REJUVENATION OF PIPE CARRYING BRIDGE OF 240 M LENGTH AND CONSTRUCTION OF COLLECTION WELL CUM PUMP ROOM OF 7MM DIAMETER WITH ALL ELECTROMECHANICAL @ VEPPUR HEAD WORKS பணி போன்ற பணிகள் நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், நகர்மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி இப்பணிகளுக்கு LOA கடிதம் மற்றும் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதும், பணி மேற்கொள்ளப்பட்ட பின்னரே நகர மன்ற கூட்டத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் மற்றும் பணி ஆணை விவரங்கள் மன்றம் ஒப்புதல் வழங்கலாம் என குறிப்பிட்டு மன்றப்பொருளாக பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்படி பணிகளில் விதிமீறல்கள் மற்றும் முறைகேடுகள் நடந்திருக்கலாம் என்பதால், அனைத்து பணிகளையும், மறுபரிசீலனை செய்ய நடவடிக்கை எடுத்திட மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளளர் என்பது மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

ஆற்காடு நகராட்சி 28–வது வார்டு உறுப்பினராக உள்ள மனுதாரர் ஆற்காடு நகராட்சியால் மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகள் அனைத்தும் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைப்பொறியாளர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட திட்ட பிரேரணை அடிப்படையில் அடிப்படையில் உரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது என்பதும், பணிகளில் காலதாமதம் மற்றும் சுணக்கம் ஏற்படாதவாறு அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், மனுதாரர் தெரிவித்துள்ள அனைத்து பணிகளுக்கும் 20.06.2025 அன்று நகரமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், நகரமன்றத்திற்கு பொருள் வைக்காமல் நேரடியாக திட்டப்பணிகளை மேற்கொள்ள அரசாணை எண்.158, ,கராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 02.11.2022–ல் ஆணையிடப்பட்டுள்ளது என்பதும், அரசிடம் மானியம் பெற்று முடிக்கப்பட வேண்டிய பணிகள் நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் முடிக்க வேண்டி உள்ளதால், பணியின் தன்மைக்கு ஏற்ப நகரமன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பிரதி மாதம் நடைறெும் நகரமன்ற சாதாரண கூட்டத்தின் அனுமதியோடு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும், ஆற்காடு நகராட்சியில் நடைபெறும் பணிகள் தொடர்பான தீர்மானங்கள் 3 தினங்களுக்கு முன்னர் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் என்பதும், தீர்மானங்களில் ஆட்சேபனைகள் இருப்பின் நகர்மன்றக்கூட்டத்தில் தெரிவிக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதும், மனுதாரரின் புகார் குறித்து விசாரணைக்கு ஆஜராக நோட்டீஸ் அனுப்பப்பட்டும், நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டும் மனுதாரர் ஆஜராகாமலும், பதில் ஏதும் அளிக்காமலும் உள்ளார் என்பதும், மேற்படி பணிகளில் (1) புதிய பேருந்து நிலையத்தில் 112 கடைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்பதும், (2) நவாப் ஏரி புனரமைக்கும் பணியில் Fencing அமைக்கும் பணி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளது என்பதும், (3) சென்னை ஆரணி சாலையில் புதிய தினசரி மார்க்கெட் அமைக்கும் பணி முடிக்கப்பட்டுள்ளது என்பதும், (4)CGF திட்டத்தின்கீழ் Pipe Carrying Bridge பணி முடிக்கப்பட்டுள்ளது என்பதும், (5) SPM 2.0 திட்டத்தின் கீழ் cesspool 2 எண்ணிக்கை கழிவுநீர் அகற்றும் வாகனம் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பதும், மனுதாரரால் புகாராக தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளில் எவ்வித விதிமீறல்கள் மற்றும் முறைகேடுகள்

நடைபெறவில்லை என்பதும் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

இந்நேர்வில், மனுதாரரின் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளில் உயர் மதிப்பினை கருத்தில் கொண்டு, ஆற்காடு நகராட்சியில் மேற்கொள்ளப்பட்ட மேற்படி பணிகள் குறித்து, நகராட்சி நிர்வாக இயக்குநர் நிலையில் உயர்நிலை குழு அமைத்து ஆய்வு செய்யுமாறும், அவ்வாய்வறிக்கையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரை அறிவுறுத்தலாம் என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள்11–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

பெறுநர்

1) திரு.K.உதயகுமார்,
எண்.131/90, பூபதி நகர்,
ஆற்காடு – 632 503,
இராணிப்பேட்டை மாவட்டம்.

2) ஆணையர்,
ஆற்காடு நகராட்சி, ஆற்காடு,
இராணிப்பேட்டை மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி, சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

13/3/26
செயலாளர்.